197 மார்ச் 13]

(3.) தகவல் கோரல்— தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்களின் அறிவிப்புகள் குறித்து

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, நான் 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாளைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம்தான் வரும், இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வரும். இதையே எடுத்துக்கொள்வதால், மற்ற நிகழ்ச்சிகளெல்லாம் தடைப்படுகின்றன.

திரு. நா.சுந்தரராஜ்: உண்ணாவிரதம் இருக்கிறார்கள் 10 நாட்களாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன், உட்காருங்கள். அறிக்கை இன்னும் தயாராகவில்லை. வந்த பிறகு நான் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் போலீசாரால் அவமானப் படுத்தப்பட்டார்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்னை என் ஆய்விலே இருக்கிறது. எனக்கு அது தெரியும். ஆய்வு முடிந்த பிறகு தெரிவிப்பேன்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவமானப்படுத்தப்பட்டது சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அம்பிகாபதி அப்பிரச்னை பற்றி எழுப்பியதைத் தாங்கள் கேட்கவில்லையென்று கருதுகிறேன். இதே கேள்வியை அவர் கேட்டதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்— தலைமை)

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் 19–2–79-லே இரண்டு கவன ஈர்ப்பு தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். அதிலே ஒரு தீர்மானம் குறித்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேச வாய்ப்பிருக்கிறது என்று சொல்லப்பட்ட காரணத்தால் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதனை நானும் ஒத்துக்கொண்டேன். ஆனால் விஷக்காய்ச்சல் சம்பந்தமாக கொடுக்கப்பட்டிருந்த மற்றொரு தீர்மானம் பற்றிக் கேட்டபோது அறைக்கு வா, அறைக்கு வா என்றுதான் சொல்கிறார்களே தவிர இந்த அவையில் ஏன் வைக்கவில்லை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறைக்கு வா, அறைக்கு வா என்றெல்லாம் மரியாதை இல்லாமல் சொல்லி இருக்க மாட்டார்கள். நீங்கள் கொடுத்த தீர்மானத்திற்குரிய பதில் தயாரானதும் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) கவன ஈர்ப்புகள்.

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு குறித்து.

திரு. கே. உச்சி : துணைத் தலைவரவர்களே, ''நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 4, 25 ஆகிய தேதிகளில் வீசிய புயலாலும் மழையின் காரணமாகவும் மற்றும் நிலச்சரிவினாலும் உயிர்கள், கால்நடைகள் இழப்பு மற்றும் விவசாய நிலங்கள் சேதம் அடைந்துள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிரிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) துணைத் தலைவர் அவர்களே, 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், குறிப்பாக 4, 5 மற்றும் 24, 25 நாட்களில் பெய்த பெரு மழையின் காரணமாக வெள்ளமும் நிலச்சரிவுகளும் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டன.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச் சரிவுகளில் 98 பேர் உயிர் இழந்தனர். 811 கால்நடைகள் அடித்துச் செல்லப்பட்டன. புயல் எச்சரிக்கைப் பற்றி விவரம் முன்னதாகவே கொடுக்கப்பட்டதால், இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தினால் உயிர்ச்சேதம் ஏதும் இல்லை. ஆனால், கறவைப் பசுக்கள் 6 இழக்கப்பட்டன.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,941 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில், 130 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. இரண்டாவது முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 545 வீடுகள் பாதிக்கப்பட்டன. இவைகளில் 75 வீடுகள் சரிந்து விழுந்தோ, அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட நிலையிலோ இருந்தன. மொத்தமாக 35 கிராமங்களைச் சார்ந்த 44,771 குடும்பங்களில் உள்ள 1,53,153 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

முதல் முறை ஏற்பட்ட வெள்ளத்தில் 2,500 ஏக்கரில் இருந்த உருளைக்கிழங்குப் பயிர்களும், 1,500 ஏக்கர் காய்கறி பயிர்களும், மற்றும் 1,400 ஏக்கரில் இருந்த